**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

**IN THE COURT OF** Judicial Magistrate, Nanguneri

Calendar
Miscellaneous
Preliminary register
Sessions

CC.No.389/2017

Deposition Of Witness for: Prosecution PW 7 / Defense / Court

Name: **திரு. நயினார்**

Husband Name / Father's Name
Village
Taluk
Religion: Muslim/Christian/Hindu
Age: /2024

**எதிரி ஆஜர்**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of September 2024.

நான் மூன்றடைப்பில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள இரண்டாவது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து **அ.சா.ஆ.3** ஆகும். தேதி மாதம் ஞாபகமில்லை சுமார் 10 வருடத்திற்கு முன்பு மூன்றடைப்பில் வைத்து விபத்து நடந்தது சம்பந்தமாக போலிஸாரிடம் கையெழுத்து போட்டு கொடுத்தேன். போலிஸார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

11.06.2016 ஆம் தேதி 10.00 மணிக்கு சம்பவ இடமான கன்னியாகுமரி தேசிய நெடுஞ்சாலை மற்றும் அதன் சுற்றுபுறங்களையும் காவல் உதவி ஆய்வாளர் உங்கள் முன்னிலையில் பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்த போது உடன் இருந்து சாட்சியாக கையெழுத்து செய்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிகளுக்கு ஆதரவாக பொய்சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.389/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 8<br>Defense<br>Court |
| Name | திரு. செல்லப்பா |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

எதிரி ஆஜர்

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of September 2024.

நான் மூன்றடைப்பில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். வழக்கில் இறந்துபோன ஆறுமுகத்தை தெரியும். ஆஜர் எதிரியை தெரியாது. வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிஸார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 11.06.2016 ஆம் தேதி மாலை 02.00 மணிமுதல் 03.00 மணிவரை நான்குநேரி வட்ட காவல் ஆய்வாளர், வழக்கில் இறந்துபோன ஆறுமுகம் என்பவரின் பிரேதத்தின் மீது பிரேத விசாரணை மேற்கொண்டபோது நீங்கள் உடன் இருந்துவிட்டு தற்சமயம் உண்மைக்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.389/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 6<br>Defense<br>Court |
| Name | **திரு. விஜயபால்** |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

**எதிரி ஆஜர்**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of September 2024.

நான் மூன்றடைப்பில் வசித்து வருகிறேன். விவசாயம் செய்து வருகிறேன். காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதலாவது கையெழுத்து என்னுடையது தான் அந்த கையெழுத்து **அ.சா.ஆ.2** ஆகும். 11.06.2016 ம் தேதி காலை 10.00 மணியளவில் மூன்றடைப்பு பிரதான சாலையில் மேற்கு தெருவிலிருந்து கிழக்கு நோக்கி ஆறுமுகம் என்ற நபர் சாலையை கடந்தபோது ஒரு இருசக்கர வாகனம் மோதி விபத்து ஏற்பட்டது. அந்த சம்பவம் நடக்கும்போது காவல்ஆய்வாளர் வரைபடம் வரைந்தார் அப்போது அதில் நான் சாட்சி கையெழுத்து போட்டேன். மேற்படி விபத்து நடந்த இடத்தில்தான் என்னுடைய வீடு இருந்தது. போலிஸார் விசாரணை செய்தனர்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

மேற்படி விபத்து சம்பவத்டதை நேரடியாக பார்த்த விபரத்தை போலிஸாரிடம் தெரிவித்தேன். வழக்கு சம்பவத்தில் இறந்துபோன ஆறுமுகத்தின் மகன் வீடு சம்பவயிடத்திலிருந்து தேசிய நெடுஞ்சாலையை கடந்து கிழக்கு பக்கம் உள்ளது. வரைபடத்தை நான் பார்த்து அது சரியென்று கண்டறிந்தபிறகு தான் கையெழுத்து செய்தேன்.

தேசிய நெடுஞ்சாலையில் மூன்றடைப்பு இரயில்வே பாலம் வடக்கு பக்கம் முடியும் இடத்தில் சுமார் 50 அடி தூரத்தில் சம்பவயிடம் உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து 20 அடி தூரத்தில் வடக்கு பக்கம் பிரதான சாலையை கடக்கும் கிராஸிங் இடம் உள்ளது என்றால் சரிதான். சம்பவயிடத்திலிருந்து வடக்கு பக்கம் 100 மீ தள்ளி டீக்கடைகள் உள்ளது என்றால் சரிதான். சம்பவம் நடந்த இடத்தில் எந்த விளக்கும் கிடையாது என்றால் சரிதான். சம்பவயிடத்தில் சாலையை கடக்கும்போது நிறைய விபத்துக்கள் நடந்துள்ளது என்றால் சரிதான்.

**DEPOSITION OF WITNESS**
(Chapter XXIII Code of Criminal procedure)

| | |
|---|---|
| **IN THE COURT OF** | Judicial Magistrate, Nanguneri |
| Calendar<br>Miscellaneous<br>Preliminary register<br>Sessions | CC.No.389/2017 |
| Deposition Of Witness for | Prosecution PW 5<br>Defense<br>Court |
| Name | திரு. ஜயாபிள்ளை |
| Husband Name / Father's Name | |
| Village | |
| Taluk | |
| Religion | Muslim/Christian/Hindu |
| Age | /2024 |

**எதிரி ஆஜர்**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 20th day of September 2024.

நான் மூன்றடைப்பில் வசித்து வருகிறேன். வயதின் முதிர்வின் காரணமாக வேலை செய்யவில்லை. எதிரியை தெரியாது. வழக்கில் இறந்துபோன ஆறுமுகத்தை தெரியாது. இவ்வழக்கை பற்றி எதுவும் எனக்கு தெரியாது. போலிசார் என்னை விசாரணை செய்யவில்லை.

**(அரசு தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாக விசாரிக்க கோரி, அனுமதி கோரப்பட்டு, அனுமதி வழங்கப்பட்டு, அரசு தரப்பில் குறுக்கு விசாரணை)**

கடந்த 11.06.2016 ஆம் தேதி அதிகாலை 05.30 மணியளவில் கன்னியாகுமரி டூ திருநெல்வேலி தேசிய நெடுஞ்சாலையில் ஆறுமுகம் வரும்போது ஆஜர் எதிரி TN 72 AT 1956 பஜாஜ் டிஸ்கவர் இருசக்கர வாகனத்தில் அதிவேகமாகவும் அஜாக்கிரதையாகவும் மோதி காயம் ஏற்படுத்தியதாகவும், டிவிஎம்சி மருத்துவமனைக்கு 108 ஆம்புலன்ஸ் மூலம் ஆறுமுகத்தை அழைத்துசென்றதாகவும் அவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டதாக கேள்விப்பட்டதாகவும் போலிசாரிடம் விசாரணையில் கூறிவிட்டு தற்சமயம்

உண்மைக்கு மாறாக எதிரிக்கு ஆதரவாக பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல.